## குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
## பெருமாள் திருமொழி

### எட்டாம் திருமொழி - மன்னுபுகழ்
### சக்ரவர்த்தித் திருமகனைக் கௌசலையார் தாலாட்டும் பாசுரம்

** மன்னுபுகழ்க் கௌசலை தன் * மணிவயிறு வாய்த்தவனே! *
தென்னிலங்கைக் கோன் முடிகள் * சிந்துவித்தாய்! செம்பொன் சேர் **
கன்னி நன்மா மதிள் புடை சூழ் * கணபுரத்தென் கருமணியே! *
என்னுடைய இன்னமுதே! * இராகவனே! தாலேலோ 1

புண்டரிக மலர் அதன் மேல் * புவனி எல்லாம் படைத்தவனே! *
திண்திறலாள் தாடகை தன் * உரம் உருவச் சிலை வளைத்தாய்! **
கண்டவர் தம் மனம் வழங்கும் * கணபுரத்தென் கருமணியே! *
எண்திசையும் ஆளுடையாய்! * இராகவனே! தாலேலோ 2

கொங்கு மலி கருங்குழலாள் * கௌசலை தன் குலமதலாய்! *
தங்கு பெரும் புகழ்ச் சனகன் * திருமருகா! தாசரதீ! **
கங்கையிலும் தீர்த்த மலி * கணபுரத்தென் கருமணியே! *
எங்கள் குலத்தின்னமுதே! * இராகவனே! தாலேலோ 3

தாமரை மேல் அயன் அவனைப் * படைத்தவனே! * தயரதன் தன்
மாமதலாய்! * மைதிலி தன் மணவாளா! ** வண்டினங்கள்
காமரங்கள் இசை பாடும் * கணபுரத்தென் கருமணியே! *
ஏமருவும் சிலை வலவா! * இராகவனே! தாலேலோ 4

பாராளும் படர் செல்வம் * பரத நம்பிக்கே அருளி *
ஆரா அன்பு இளையவனோடு * அருங்கானம் அடைந்தவனே! **
சீராளும் வரை மார்பா! * திருக்கண்ணபுரத்தரசே! *
தாராளும் நீண்முடி * என் தாசரதீ! தாலேலோ 5

சுற்றம் எல்லாம் பின் தொடரத் * தொல்கானம் அடைந்தவனே! *
அற்றவர்கட்கு அருமருந்தே! * அயோத்தி நகர்க்கு அதிபதியே! **
கற்றவர்கள் தாம் வாழும் * கணபுரத்தென் கருமணியே!
சிற்றவை தன் சொல் கொண்ட * சீராமா! தாலேலோ 6

ஆலின் இலைப் பாலகனாய் * அன்றுலகம் உண்டவனே! *
வாலியைக் கொன்று அரசு * இளைய வானரத்துக்கு அளித்தவனே! **
காலின்மணி கரை அலைக்கும் * கணபுரத்தென் கருமணியே! *
ஆலி நகர்க்கு அதிபதியே! * அயோத்திமனே! தாலேலோ 7

** மலை அதனால் அணை கட்டி * மதிள் இலங்கை அழித்தவனே! *
அலைகடலைக் கடைந்து * அமரர்க்கு அமுதருளிச் செய்தவனே! **
கலை வலவர் தாம் வாழும் * கணபுரத்தென் கருமணியே! *
சிலை வலவா! சேவகனே! * சீராமா! தாலேலோ 8

தளை அவிழும் நறுங்குஞ்சித் * தயரதன் தன் குல மதலாய்! *
வளைய ஒரு சிலை அதனால் * மதிள் இலங்கை அழித்தவனே! **
களை கழுநீர் மருங்கலரும் * கணபுரத்தென் கருமணியே! *
இளையவர்கட்கு அருள் உடையாய்! * இராகவனே! தாலேலோ 9

** தேவரையும் அசுரரையும் * திசைகளையும் படைத்தவனே! *
யாவரும் வந்தடி வணங்க * அரங்க நகர்த் துயின்றவனே! **
காவிரி நல்நதி பாயும் * கணபுரத்தென் கருமணியே! *
ஏவரி வெஞ்சிலை வலவா! * இராகவனே! தாலேலோ 10

** கன்னி நன்மா மதிள் புடை சூழ் * கணபுரத்தென் காகுத்தன்
தன்னடி மேல் * தாலேலோ என்றுரைத்த * தமிழ் மாலை **
கொல்நவிலும் வேல் வலவன் * குடைக் குலசேகரன் சொன்ன *
பன்னிய நூல் பத்தும் வல்லார் * பாங்காய பத்தர்களே 11

**குலசேகரப் பெருமாள் திருவடிகளே சரணம்**

---